28th April 1960]

THE HON. SRI C. SUBRAMANIAM: அந்த மாதிரியான தடை எதுவும் வராது. மந்திரிகள் எப்போதும் தப்பித்துக்கொள்வார்கள் அரசியல் வாதிகளும் தப்பித்துக்கொள்வார்கள். கடைசியில், அரசியல் வாதிகள் செய்யும் பிரசாரத்தைக்கேட்டு பொது மக்கள்தான் கஷ்டப்படுவார்கள்.

SRI A. V. P. ASAITHAMBI: இந்திய அரசியல் சட்டப்படி 14 மொழிகள் தேசீய மொழிகளாக இருக்கும்போது, சில அரசியல் கட்சிகளின் பிரசாரம் காரணமாக ஹிந்தியை சிலர் படிக்காமல் இருந்தால், பின்னல் தீங்கு வரும், அவர்கள் கஷ்டப்படுவார்கள் என்று கனம் அமைச்சர் சொன்னர். அப்படியானல், தீங்கு எந்த ரூபத்தில் வரும் என்று அவர் நினைக்கிறர்? ஹிந்தியே பொது மொழியாக வரும் என்ற அச்சம் அவருக்கு இருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அப்படி அச்சம் ஒன்றும் இல்லை. ஹிந்தி பெடரல் மொழியாக வரவேண்டும். நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றி கான்ஸ்டிட்யூஷனிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆங்கிலமும் ஹிந்தியுடன் இன்னும் கொஞ்ச காலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேம். ஹிந்தி தெரிந்தவர்களுக்கு, பெடரல் ஸெர்விஸில் நல்ல பங்குகொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

MR. SPEAKER: Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO THE SCARCITY OF WATER IN CERTAIN VILLAGES AND HARIJAN COLONIES IN GUDIYATHAM TALUKr

MR. SPEAKER: I have received notice under Rule 41 from the hon. Member, Sri V. K. Kothandaraman that he will call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, viz., scarcity of water in certain villages and Harijan colonies in Gudiyatham taluk and the consequent famine conditions in that Taluk. 9–30 a.m.

SRI V. K. KOTHANDARAMAN: கனம் சபாநாயகர் அவர்களே, நான்கு லட்சம் ஜனத்தொகை கொண்ட குடியாத்தம் தாலூகாவில் விவசாயத்திற்குத் தண்ணீர் இல்லை என்பது ஒரு புறமிருக்க, குடிப்பதற்கே தண்ணீர் இல்லாத கிராமங்கள் சுமார் 100 அங்கே இப்போது இருக்கின்றன. சுமார் 70, 80 அடி ஆழம் வரை கிணறு வெட்டியும் அங்கே தண்ணீர் வருவதில்லை. அங்கே ஒவ்வொரு கிராமமும் குடி தண்ணீரே இல்லாததாக இருக்கிறது என்பது கனம் முதல் அமைச்சருக்கே தெரியும். அதிலும், குறிப்பாக ஹரிஜன காலனிகளில் தண்ணீர் இல்லை. மேலும், இப்போது ஆந்திராவிலிருந்து 30 கிராமங்கள் இங்கே வந்து சேர்ந்திருக்கின்றன. அப்படி வந்து சேர்ந்துள்ள பல கிராமங்களில் குடிதண்ணீர் கிணறு கூட இல்லை. குடி தண்ணீர் மிகவும் அவசியமானது. சாப்பாடு இல்லாவிட்டால் பொறுத்துக்கொள்ள

[Sri V. K. Kothandaraman] [28th April 1960

முடியும், ஆனால் ஒரு நாள் கூட தண்ணீர் குடிக்காமல் இருக்க முடியாது. எனவே இந்தப் பிரச்சனையில் சர்க்கார் தீவிர கவனம் செலுத்த வேண்டும். அங்கே பல வருடங்களாக இந்த நிலைமை இருக்கிறது. காரணம், நமது மதிப்பிற்குறிய முதல் அமைச்சர் அங்கே தண்ணீர் வசதி செய்து தருவதற்கு முயற்சி எடுத்திருந்தாலும், பாலார் பேஸின் ரூல்ஸ் என்ற முட்டுக்கட்டை காரணமாக அதற்கான திட்டம் கைவிடப்பட்டது. அங்கே நிலங்களுக்குத் தண்ணீர் பாயாவிட்டாலும், 75 லட்ச ரூபாய்க்கு மேல் செலவு செய்யவில்லை என்றாலும், குறைந்த பட்சத் தொகையாவது செலவழித்து மூர்த்தனை நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்றினால்தான் அங்கே குடிதண்ணீர் வசதி ஏற்படும். இல்லாவிட்டால் அங்குள்ள கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி கிடைக்காது. அங்கே குடிப்பதற்கே தண்ணீர் இல்லை என்றால் விவசாயிகளின் நிலை எப்படி இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அங்கே தண்ணீர் வசதி செய்து தர தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கனம் முதல் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, the Government are aware that due to failure of rains during the current fasli year, the drinking water wells in some of the villages of Gudiyatham taluk in North Arcot district have become dry. The particulars regarding the wells which require deepening in the taluk have already been collected and necessary instructions have been issued to the Minor Irrigation staff to inspect these wells and submit estimates for sanction. The Block Development Officer, K. V. Kuppam, has been asked to take immediate action to deepen the wells which lie in his block under the Rural Water Supply Scheme. Meanwhile, the villagers are using the existing private drinking water wells and irrigation wells where water is available.

Foodgrains are available in the market and no famine conditions prevail in the taluk though the seasonal conditions have not been quite good this year. Adequate avenues are open to provide employment to the labourers.

The general condition of the taluk is satisfactory and steps have been taken to ease the water scarcity felt in some of the villages in the taluk.

III.—ANNOUNCEMENT.

NOMINATION OF COUNCIL MEMBERS TO THE JOINT SELECT COMMITTEE ON THE MADRAS LAND REFORMS BILL, 1960.

MR. SPEAKER : I have to announce that the Madras Legislative Council concurs with the Assembly in setting up a Joint Select Committee of both the Houses consisting of 45 members (30 Members of the Legislative Assembly and 15 members of the Council) to consider the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Bill, 1960 (L.A. Bill No. 8 of 1960), and that the following Members of the Council have been selected to serve on such a Joint Select Committee:—

1. The Hon. Sri R. Venkataraman.
2. Dr. A. Lakshmanaswami Mudaliar.